# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 263/மா/2022**

**நாள் : 25.01.2023**

திரு. M. முனிரத்தினம்,
சென்னை- 600 081. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–4, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, மாதா கோவில் சந்து, எண்.75 என்ற முகவரியில் வசிக்கும் திரு. M. முனிரத்தினம் என்பவரின் 16.12.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 263/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

<u>ஆணை</u>

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, மாதா கோவில் சந்து, எண்.75 என்ற முகவரியில் வசிக்கும் திரு. M. முனிரத்தினம் என்பவரின் முறையீட்டு மனுவில்,

> நான் மேற்கண்ட விலாசத்தில் கடந்த 40 வருடங்களுக்கு மேற்பட்டு குடும்பத்துடன் வசித்து வருகிறேன். இந்நிலையில் நாள் 10.09.2022 அன்று முதல் சென்னை-81, மண்டலம்-04, வார்டு-40 தண்டையார் பேட்டை, மாதா கோவில் சந்து, கதவு எண்.76ல் எனது வீட்டிற்கு பக்கத்தில் வசிக்கும் வீட்டு உரிமையாளர்களான திருமதி. வெண்ணிலா, சாந்தி மற்றும் ரேவதி ஆகியோர் சென்னை மாநகராட்சியிடம் எந்த விதமான கட்டிட அனுமதியும் பெறாமல் அருகில் உள்ள எனது இடத்திற்கு சொந்தமான ஒன்றரை அடி இடத்தை ஆக்கிரமித்து கட்டிடம் கட்டி வருவதோடு, மாநகராட்சி சாலையின் முன்பகுதியில் உள்ள சில அடி நிலத்தையும் சேர்த்து கட்டிடம் கட்டி வருகின்றனர்.
>
> 2. இது தொடர்பாக நான் அவர்களிடம் கேட்டபோது அவர்கள் தகாத வார்த்தைகள் பேசி வன்முறையில் ஈடுபடுகின்றனர். ஆதலால், இந்த புகார் தொடர்பாக நான் சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் மண்டல அலுவலருக்கு எழுத்துப்பூர்வமான புகார் செய்ததன் மூலம் மாநகராட்சி அதிகாரிகள் எங்கள் பகுதிக்கு வந்து விசாரணை செய்து என்னுடைய இடம் மற்றும் மேற்கண்ட நபர்கள் கட்டிடம் கட்டப்படும் இடத்தையும் ஆய்வு செய்தனர். அதில் என் இடத்திற்கு மாநகராட்சி அளவு புத்தகத்தில் உள்ளபடி சரியாக இருப்பதாகவும் மேற்கண்ட எங்களின் பக்கத்து வீட்டுகாரர்கள் கட்டப்படும் கட்டிடத்தின்

அளவு சரியாக இல்லையென்பதாலும், அவர்கள் முறையாக கட்டிட அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டியதால் உடனே கட்டிட பணியினை நிறுத்தவும் Stop Working Notice அறிவிப்பு கொடுத்துவிட்டு சென்றார்கள்.

3. எனினும், மேற்கண்ட எனது பக்கத்து வீட்டுகாரர்கள் சென்னை மாநகராட்சி அதிகாரிகள் கொடுத்த அறிவிப்பு மற்றும் சட்ட விதிகளை பின்பற்றாமல் தொடர்ந்து அனுமதியற்ற விதிமீறல் கட்டிடம் கட்டிக் கொண்டு வருகின்றனர். இது தொடர்பாக நான் அடுத்தடுத்து மாநகராட்சி அதிகாரிகளுக்கு புகார் அளித்தும் ஆன்லைன் புகார் எண்.2022-664HNH அளித்தும் முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இது தொடர்பான புகார்களின் அனைத்து நகல்களையும் இத்துடன் இணைத்துள்ளேன்.

4. எனவே உயர் திரு. ஐயா அவர்கள் எனது இந்த புகார் மனுவினை விசாரணை செய்து மேற்கண்ட எங்களின் பக்கத்து வீட்டுகாரர்களால் என்னுடைய இடத்தையும் சாலையின் இடத்தையும் ஆக்கிரமித்து கட்டப்பட்டுவரும் அனுமதியற்ற விதிமீறல் கட்டிடம் மீது சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்க சென்னை மாநகராட்சி அதிகாரிகளுக்கு உரிய ஆணையினை பிறப்பிக்க வேண்டுமென தங்களை நான் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 12.01.2023 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகும்படி 29.12.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 12.01.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :

"எனது வீட்டின் பக்கத்தில் கதவு இலக்க எண்.76 ல் வசிக்கும் திருமதி வெண்ணிலா, சாந்தி மற்றும் ரேவதி ஆகியோர் சென்னை பெருநகர மாநகராட்சியிடம் எவ்வித அனுமதியும் பெறாமல் எனது இடத்திற்கு சொந்தமான 1½ அடியையும் சேர்த்து கட்டடம் கட்டுவதோடு சென்னை மாநகராட்சி சாலையின் முன்பகுதியையும் ஆக்கிரமித்து படிக்கட்டுக்கள் கட்டியுள்ளார்கள். அனுமதியில்லாமல் கட்டப்பட்டு வரும் மேற்கண்ட 3 பேரின் கட்டடங்கள் தொடர்பாக மாநகராட்சி அலுவலர்களிடம் புகார்கள் அனுப்பியதன் பேரில், மேற்கண்ட மூன்று உரிமையாளர்களின் கட்டடங்களுக்கும் "Stop Work Notice" 16.9.2022 அன்று அளித்துள்ளனர். ஆனால், மேற்கண்ட நோட்டீஸ் மாநகராட்சியால் அளித்த பின்னரும், மேற்கண்ட 3 பேரும் தொடர்ந்து தங்களது கட்டடங்களை கட்டி வருகின்றனர். எனவே அனுமதியில்லாமல் கட்டப்பட்டு வரும் மேற்கண்ட விதிமீறல் கட்டடங்களின் மீது தேவையான நடவடிக்கை எடுத்திடவும், பொதுவழி ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும் ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். இது சம்பந்தமாக புகைப்பட நகல்களை இம்முறைமன்ற நடுவத்தில் பணிந்து சமர்ப்பிக்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் உதவிப் பொறியாளர் 12.01.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தில் :**

"மனுதாரர் குறிப்பிட்டுள்ள சென்னை தண்டையார்பேட்டை மாதா கோவில் லேன் எண்.76-இல் கட்டப்பட்டு வரும் அனுமதியில்லா கட்டடத்திற்கு Stop Work Notice/ Notice calling for approved plan 16.09.2022 அன்று வழங்கப்பட்டது. மேலும், அன்றைய தினமே மேற்கண்ட கட்டடத்தை கட்டுவதற்கு வைக்கப்பட்டிருந்த கட்டுமானப் பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டன. மேலும், 11.01.2023 அன்று வீட்டின் உரிமையாளர்களுக்கு Lock

and Seal நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தையும், கால அவகாசம் முடிவுற்றதும் மேல்நடவடிக்கை மாநகராட்சியால் தொடரப்படும் என்கின்ற விவரத்தையும் இம்முறை மன்ற நடுவத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் மேற்கண்ட இடத்தில் கட்டப்பட்டுள்ள வீட்டின் படிக்கட்டுக்கள் பொது மக்கள் பயன்படுத்தும் சாலையை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ளதால், அதனை அகற்றிட தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பான அறிவிப்புகளின் நகல்கள் மற்றும் புகைப்படங்களின் நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன் என தெரிவித்துள்ளார்.

**மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4ன் உதவிப் பொறியாளர் வாக்குமூலம் மற்றும் அவர் சமர்ப்பித்த ஆவணங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்கண்ட விவரங்கள் தெரியவருகின்றன.**

மனுதாரர் தன்னுடைய மனுவில் தனது பக்கத்து வீட்டில் வசிக்கும் திருமதி. வெண்ணிலா, சாந்தி மற்றும் ரேவதி ஆகியோர் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதி பெறாமல் கட்டடம் கட்டி வருவதாகவும் எனவே அக்கட்டடத்தை அகற்ற கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டவாறு கதவு இலக்க எண்.76ல் வசிக்கும் உரிமையாளர்கள், பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதி பெறாமல் கட்டடம் கட்டி வருகிறார்கள் என்பது எதிர் மனுதாரர்களின் வாக்குமூலத்தின் மூலம் அறியமுடிகிறது. மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-4ன் அலுவலர்கள் மேற்கண்ட அனுமதியின்றி கட்டப்பட்டு வரும் கட்டடத்தின் உரிமையாளர்களுக்கு 16.9.2022 அன்று Stop Work Notice/Notice Calling for approved plan வழங்கப்பட்டுள்ளது என்பதும் மேலும் 11.01.2023 அன்று வீட்டின் உரிமையாளர்களுக்கு Lock and Seal வழங்கப்பட்டு, அதன் கால அவகாசம் முடிவுற்றதும் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும், மேற்கண்ட வீட்டின் படிகட்டுகள் பொதுமக்கள் பயன்படுத்தும் சாலையை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ளதால், அதனை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-4ன் உதவிப் பொறியாளரின் வாக்குமூலத்தின் மூலம் அறிய முடிகிறது.

**இந்நேர்வு தொடர்பாக இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது.**

மனுதாரர் புகார் மனு அளித்தவுடன், அனுமதியின்றி கட்டப்பட்டு வரும் கட்டடத்தின் உரிமையாளருக்கு 16.9.2022 அன்று Stop Work Notice / Notice for Calling approved Plan வழங்கப்பட்டும், அன்றே கட்டுமானப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டும், அதன் பிறகு கால அவகாசம் முடிவுற்ற பின் எடுக்கப்பட வேண்டிய தொடர் நடவடிக்கை எடுக்காமல், காலதாமதமாக 11.1.2023 அன்று வீட்டின் உரிமையாளர்களுக்கு Lock and Seal நோட்டீஸ் வழங்கிய செயல் வன்மையாக கண்டிக்கத்தக்கது.

எனவே, காலதாமதமாக நடவடிக்கை எடுத்த சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையர் அவர்களுக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-4ன் உதவிப் பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள வீட்டின், படிக்கட்டுகள் பொது மக்கள் பயன்படுத்தும் சாலையில் கட்டப்பட்டுள்ளதால், அதனை உடனடியாக அகற்றிட தேவையான நடவடிக்கையை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-4ன் உதவி ஆணையருக்கு

அறிவுரை வழங்கி இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. இந்நேர்வு தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கையை குறித்த அறிக்கையை இம்முறைமன்றத்திற்கு அனுப்பி வைக்குமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-4ன் உதவி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

The indifference, slackness and inaction on the part of the local field officers are censured by the Forum. Unless stringent disciplinary action is taken against the delinquents upto the Assistant Commissioner by the Greater Chennai Corporation for this, indiscipline, collusion and complicity will assume cancerous proportions that will spoil the image of the Greater Chennai Corporation in the eyes of the citizens of the locality concerned besides being vulnerable before the Courts if the issue is challenged before the Judicial Forum.

2023–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 25–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. M. முனிரத்தினம்,
   எண்.75, மாதா கோவில் சந்து,
   தண்டையார்பேட்டை, சென்னை – 600 081.
2. அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
3. துணை ஆணையர், (பணிகள்)
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
   } *He is requested to ensure the implementation of this order*
4. துணை ஆணையர்,
   மண்டலம் - 4, பெருநகர சென்னை மாநகராட்சி
   266, திருவற்றியூர் நெடுஞ்சாலை,
   பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை – 600 021.
   } *He is requested to ensure the implementation of this order*
5. மண்டல அலுவலர்,
   மண்டலம் - 4, பெருநகர சென்னை மாநகராட்சி,
   266, திருவற்றியூர் நெடுஞ்சாலை,
   பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை – 600 021.
6. கண்காணிப்பு பொறியாளர்,
   மழைநீர் வடிகால்துறை,
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

25/01/23

செயலாளர்.

25.1.23